# COMPCARE K. BHUVANESWARI

Founder, CEO, Managing Director

## Compcare Software Private Limited

*An IT Company Since 1992*

**காம்கேர் சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடட்**

வேளச்சேரி, சென்னை - 42

Phone : 044-22442911

Fax : 044-22442911

Mobile : 9884280265 / 94449 49921

**Web Site :**

**http://www.compcarebuvaneswari.blogspot.com**

**www.compcaresoftware.com**

**Email : hrd@compcaresoftware.com**

**compcare@hotmail.com**

**காம்கேர் கே. புவனேஸ்வரி**
CMD, Compcare Software Private Limited

- **நிறுவன மேலாளராக…**
- **சாஃப்ட்வேர் துறை வல்லுனராக…**
- **மல்டிமீடியா அனிமேஷன் தயாரிப்பாளராக…**
- **தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சி தயாரிப்பாளராக…**
- **குறும்பட கிரியேடிவ் டைரக்டராக…**
- **சமூக ஆர்வலராக…**
- **புத்தக எழுத்தாளராக…**
- **புத்தக பதிப்பாளராக…**
- **அறக்கட்டளை**

## 1. நிறுவன மேலாளராக...

- கம்ப்யூட்டரில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

- **Compcare Software Private Limited**
  என்ற சாஃப்ட்வேர் நிறுவனத்தின் **Founder, CEO & MANAGING DIRECTOR**

> கடந்த 19 வருடங்களாக இந்த சாஃப்ட்வேர் நிறுவனத்தை திறம்பட நடத்தி வருகிறார்.
> **ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளார்.**

## 2. சாஃப்ட்வேர் துறை வல்லுனராக...

- பல்வேறு நிறுவனங்களுக்கு வெப் டிஸைனிங் மற்றும் சாஃப்ட்வேர்களையும் தன் நிறுவன **Software Development Division** மூலம் செய்து கொடுத்து வருகிறார்.

> சுமார் 500-கும் மேற்பட்ட சாஃப்ட்வேர்களை உருவாக்கி வெளியிட்டுள்ளார்.

## 3. மல்டிமீடியா அனிமேஷன் தயாரிப்பாளராக...

- குழந்தைகள், மாணவர்கள், பெரியோர்களுக்கான
  கார்ட்டூன்-அனிமேஷன் தயாரிப்புகளை
  தன் நிறுவன **Multi Media Studio** மூலம்
  வெளியிட்டு வருகிறார்.

- **பல பல்கலைகழகங்களுக்கு** பாடப் புத்தகங்களுக்காக
  மல்டி மீடியா **Education சி.டி.**க்களையும் தயாரித்து வருகிறார்.

> சுமார் 200-கும் மேற்பட்ட மல்டிமீடியா அனிமேஷன் தயாரிப்புகளை
> வெளியிட்டுள்ளார்

## 4. தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சி தயாரிப்பாளராக...

- தொலைக்காட்சி வாயிலாகவும் கம்ப்யூட்டர் பற்றிய நிகழ்ச்சிகளை
  எளிய தமிழில் அனைவரையும் சென்றடையும் விதத்தில் நடத்தி வருகிறார்.
  வெளிநாடுகளிலுள்ள தொலைக்காட்சி சானல்களில் ஒளிப் பரப்பாகும் இவரது
  கம்ப்யூட்டர் நிகழ்ச்சிகள் அங்குள்ள தமிழர்கள் மத்தியில் மிகவும் பிரபலம்.

- ஜெயா டி.வி.யிலும், **UGC** சானல்களிலும் இவரது கம்ப்யூட்டர் நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

- ரேடியோ FM-களில் தினம் ஒரு திருக்குறள் மற்றும் தினம் ஒரு கதை போன்ற நிகழ்ச்சிகளையும் தயாரித்து வருகிறார்.

> சுமார் 500-கும் மேற்பட்ட **தொலைக்காட்சி நிகழ்ச்சி மற்றும் வானொலி** தயாரிப்புகளை தயாரித்து வெளியிட்டுள்ளார்.

## 5. குறும்பட கிரியேடிவ் டைரக்டராக...

- சமுதாயக் கண்ணோட்டத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்தில் குறும்படங்களையும் தயாரித்து வருகிறார். இதன் தொடக்கமாக **"அன்புள்ள அப்பா அம்மாவுக்கு..."** என்ற குறும்படத்தை இயக்கியுள்ளார்.

> சுமார் 50-கும் மேற்பட்ட குறும்படங்களையும், ஆவணப்படங்களையும் தயாரித்து வெளியிட்டுள்ளார்.

## 6. சமூக ஆர்வலராக...

- கிராமப்புறங்களிலிருந்து படித்து பட்டம் பெற்று சென்னை வருகின்ற மாணவ, மாணவிகளுக்கு வேலை வாய்ப்புக்கு உதவுகின்ற கன்சல்டன்ஸி **(Consultancy)** மற்றும் கருத்தரங்குகளையும் **(Seminor)** நடத்தி வருகிறார்.

- கிராமப்புறங்களிலுள்ள கல்லூரிகளுக்கு சென்று, அங்குள்ள மாணவர்களுக்கு தன்னம்பிக்கை கொடுக்கும் விதத்தில் கேரியர் கைடன்ஸ் ஒர்க்ஷாப்புகளையும் **(Career Guidance Workshop)** நடத்தி வருகிறார்.

- தனது நிறுவனத்தின் கம்பெனி ப்ராஜெக்ட்டுகள் மூலம் மாணவர்களுக்கு சாஃப்ட்வேர் பயிற்சி கொடுத்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறார். இதுவரை ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் இவரிடம் பயிற்சிப் பெற்று சாஃப்ட்வேர் துறையில் பிரகாசித்து வருகிறார்கள்.

## 7. புத்தக பதிப்பாளராக... எழுத்தாளராக...

- **50 புத்தகங்களுக்கு** மேல் எழுதியுள்ள இவரது கம்ப்யூட்டர் புத்தகங்கள் சென்னையிலுள்ள பெரிய பதிப்பாளர்களான விகடன் பதிப்பகம், கண்ணதாசன் பதிப்பகம், மணிமேகலை பிரசுரம், கலைஞன் பதிப்பகம் மற்றும் மாணிக்கவாசகர் பதிப்பகம் இவர்களின் மூலம் வெளியிடப்பட்டு வருகிறது.

- மேலும் இவரது பல கம்ப்யூட்டர் புத்தகங்கள் சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைகழகம் போன்ற பல பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்லூரிகளில் பாட புத்தகங்களாக உள்ளன.

- அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து
  மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக
  கம்ப்யூட்டர் புத்தகங்களை எழுதியுள்ளார்.

- தினமலர், குமுதம் சிநேகிதி, லேடீஸ் ஸ்பெஷல் போன்ற பத்திரிக்கைகளில் கம்ப்யூட்டர் தொடர் எழுதி உள்ளார்.

- நிறைய படங்களுடன் அருமையான உதாரணங்களுடன்...
  அழகான தமிழில் அனைவருக்கும் புரியும் வண்ணம்
  தெளிவாக எழுதுவது இவரது சிறப்பு.

- இவரது புத்தகங்கள் சாதாரண கம்ப்யூட்டர் புத்தகங்கள் போல இல்லாமல்,
  ஆராய்ச்சி புத்தகங்கள் போல அமையப் பெற்று,
  இவரது அனுபவத்தின் ஆழம் ஒவ்வொரு வார்த்தைகளிலும்
  வெளிப்பட்டிருப்பது இவரது புத்தகங்களின் சிறப்பு.

## 8. அறக்கட்டளை

தன் அப்பா அம்மாவின் பெயரில்
**ஸ்ரீபத்மகிருஷ்** என்ற அறக்கட்டளைத் தொடங்கி
அதன் மூலம் சிறப்பு கம்ப்யூட்டர் நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சிகளை
கொடுத்து வருகிறார். இதன் வாயிலாகக் கிடைக்கும் வருமானத்தை வைத்து
ஆஸ்ரமக் குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் உடலாலும், மனதாலும்
பாதிக்கப்பட்டவர்களுக்கு வருடந்தோறும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.